ஏப்ரல்
2020

விண்மீன் .காம்

முதலாம் வார நடப்பு நிகழ்வுகள்

01 ஏப்ரல் – 07 ஏப்ரல்

www.winmeen.com

நடப்பு நிகழ்வுகள்

1.திவால் மற்றும் கடன்முறி குறியீடு விதிமுறைகளின்படி, திவால் தீர்வு செயல்முறைகளை நிறைவு செய்வதற்கான காலக்கெடு என்ன?

அ. 270 நாட்கள்

ஆ. 300 நாட்கள்

இ. 330 நாட்கள் ☑

ஈ. 360 நாட்கள்

- இந்திய திவால் & கடன்முறி வாரியத்தின் (IBBI) விதிமுறைகளின்படி, திவால் தீர்வு செயல்முறைகளை நிறைவு செய்வதற்கான ஒட்டுமொத்த காலக்கெடு 330 நாட்கள் ஆகும். COVID-19 நோய்த்தொற்று காரணமாக 21 நாள் நாடடங்கு அமலில் இருப்பதால் ஏற்பட்டுள்ள சிரமங்களைக் கருத்தில்கொண்டு, பெருநிறுவனங்கள் திவால் தீர்வு வழிமுறை ஒழுங்குமுறைகளை இந்திய திவால் மற்றும் கடன்முறி வாரியம் (Insolvency and Bankruptcy Board of India – IBBI) திருத்தியுள்ளது.

- COVID-19 பரவலின் தொடர்ச்சியாக மத்திய அரசு அமல்செய்துள்ள முடக்கநிலைக் காலம் இதற்கான வரையறைக்குள் சேர்த்துக் கணக்கிடப்படாது என்ற வகையில் இந்தத் திருத்தம் அமைந்துள்ளது. பெருநிறுவன திவால்தீர்வு நடைமுறை தொடர்பாக இந்த நாட்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாது. இருந்தபோதிலும் இந்த நடைமுறைகளில் அளிக்கப்பட்டுள்ள ஒட்டுமொத்த காலவரம்புக்கு உட்பட்டதாக இது இருக்கும்.

2.ஐம்பதாண்டுகளாக அமெரிக்காவில் வெளியிடப்பட்டுவந்த எந்த இந்திய செய்தித்தாள், அதன் அச்சுப் பதிப்பை நிறுத்தியுள்ளது?

அ. India Abroad ☑

ஆ. Indians in America

இ. Indian Panorama

ஈ. Indian Diaspora

- கடந்த ஐம்பதாண்டுகளாக அமெரிக்காவில் வெளியாகி வந்த இந்திய செய்தித்தாள்களுள் ஒன்றான, 'India Abroad', COVID-19 நோய்த்தொற்றின் காரணத்தினால் அண்மையில் அதன் அச்சுப்பதிப்பை நிறுத்தியது. கோபால் ராஜூவால் கடந்த 1970ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இது, இந்திய செய்திகளை மையமாகக்கொண்ட செய்தித்தாளாகும். இந்தச்செய்தித்தாள், ஐக்கிய அமெரிக்காவில் வாழும் இந்திய புலம்பெயர்ந்தோருக்காக இப்பத்திரிக்கை வெளியாகி வந்தது. அமெரிக்காவிலுள்ள புலம்பெயர்ந்தோர் இதன் முக்கிய வாசகர்களாக இருந்தனர்.

3.தேசிய முதலீடு மற்றும் உட்கட்டமைப்பு நிதியத்தில், $100 மில்லியன் டாலருக்கு சமமாக முதலீடு செய்யவுள்ள பன்னாட்டு நிதி நிறுவனம் எது?

அ. உலக வங்கி

ஆ. பன்னாட்டு செலவாணி நிதியம்

இ. ஆசிய வளர்ச்சி வங்கி ☑

ஈ. ஐரோப்பிய மத்திய வங்கி

ADB ASIAN DEVELOPMENT BANK

❖ மணிலாவைச் சார்ந்த ஆசிய வளர்ச்சி வங்கி, $100 மில்லியன் டாலருக்கு சமமான நிதியை தேசிய முதலீடு & உட்கட்டமைப்பு நிதியத்தில் (NIIF) முதலீடு செய்யவுள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கியானது இந்திய அரசாங்கம் மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு மற்றும் முதலீட்டு வங்கியில் இந்தியாவின் NIIF கருவிகளுள் ஒன்றில் ஒரு முதலீட்டாளராக இணைகிறது. NIIF என்பது இந்திய மற்றும் பன்னாட்டு முதலீட்டாளர்களுக்கான ஒரு முதலீட்டுத் தளமாகும். அங்கு அவர்கள், உள்நாட்டு உட்கட்டமைப்பில் பங்கு மூலதனத்தை முதலீடு செய்வதற்கு நிர்பந்திக்கப்படுகிறார்கள்.

4. NASA'இன் முன்மொழியப்பட்டுள்ள நிலவு விண்வெளி நிலையத்திற்கு சரக்கு மற்றும் பொருட்களை ஏற்றிச்செல்வதற்கான ஒப்பந்தத்தைப் பெற்றுள்ள விண்வெளி நிறுவனம் எது?

அ. Blue Origin

ஆ. SpaceX ☑

இ. Astra Space

ஈ. Exos Aerospace

❖ நிலவில் அமையவுள்ள NASA'இன் விண்வெளி நிலையத்திற்கு சரக்கு மற்றும் பொருட்களை ஏற்றிச் செல்வதற்கான ஒப்பந்தத்திற்கு, எலோன் மஸ்க்கிற்கு சொந்தமான SpaceX விண்வெளி நிறுவனத்தை NASA தேர்ந்தெடுத்துள்ளது. நிலவில் ஒரு நிரந்தரமான விண்வெளி நிலையத்தை அமைப்பதற்கு நோக்கங்கொண்டுள்ள இத்திட்டம், அங்கிருந்து செவ்வாய் கிரகத்திற்கான எதிர்காலத் திட்டங்களை வகுப்பதையும் நோக்கமாகக்கொண்டுள்ளது.

❖ SpaceX நிறுவனம் தனது எடைமிகுதியான, 'Dragon XL' ஏவுகலத்தின்மூலம் பொருட்களை அனுப்புவ –தற்கான NASA'இன் $7 பில்லியன் மதிப்பிலான ஒப்பந்தத்தின் ஒருபகுதியைப் பெறவுள்ளது.

5.மார்ச் 30 அன்று தனது மாநில நாளைக் கொண்டாடிய மாநிலம் எது?

அ. கேரளம்

ஆ. ஒடிசா

இ. பஞ்சாப்

ஈ. இராஜஸ்தான் ☑

❖ முற்காலத்தில், 'இராஜபுதனம்' என்றழைக்கப்பட்ட தற்கால இராஜஸ்தான் மாநிலம் உருவான நாளின் நினைவாக ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.30 அன்று, 'இராஜஸ்தான் நாள்' கொண்டாடப்படுகிறது 1949 மார்ச்.30 அன்று தற்போதைய இராஜஸ்தான் மாநிலம் நடைமுறைக்கு வந்தது.

❖ பரப்பளவைப் பொறுத்தவரை, இராஜஸ்தான், இந்தியாவின் மிகப்பெரிய மாநிலம் ஆகும். இந்த மாநிலம் விடுதலைக்கு முன்னர் சுமார் 21 சிறிய மற்றும் பெரிய சுதேச அரசுகளை உள்ளடக்கியிருந்தது. இராஜஸ்தான், ஓர் ஒருங்கிணைந்த மாநிலமாக, இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு அவர்களால், 1948 ஏப்ரல்.18 அன்று தொடக்கிவைக்கப்பட்டது.

6. S & P Ratings'இன் அண்மைய அறிக்கையின்படி, 2020-21ஆம் நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) வளர்ச்சி விகிதம் என்ன?

அ. 5.0 %

ஆ. 4.5 %

இ. 3.5 % ☑

ஈ. 2.5 %

❖ S & P Ratings'இன் அண்மைய அறிக்கையின்படி, 2020-21ஆம் நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) வளர்ச்சி விகிதம் 3.5% ஆக இருக்கும். இந்நிறுவனம் அதன் முந்தைய மதிப்பீட்டில் இதனை 5.2 சதவீதமாக கணித்திருந்தது குறிப்பிடத்தக்கது. ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் ஏற்பட்ட COVID-19 நோய்த்தொற்றின் காரணமாக உற்பத்தியில் ஏற்பட்ட மிகப்பெரும் சரிவே இந்தக் குறைப்புக்குக் காரணமாக கூறப்படுகிறது. 2020'இல் ஆசிய-பசிபிக் பிராந்தியத்தின் பொருளாதாரம், 2.2 சதவீதமாக அதிகரிக்கும் என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

7.பெட்ரோலிய & இயற்கை எரிவாயு அமைச்சரின் சமீபத்திய அறிவிப்பின்படி, இந்தியாவுக்கு தடையின்றி LPG வழங்குவதாக உறுதியளித்துள்ள நாடு எது?

அ. சவுதி அரேபியா ☑

ஆ. ஈரான்

இ. ஈராக்

ஈ. வெனிசூலா

❖ சவுதி அரேபியா, இந்தியாவிற்கு, திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய எரிவாயுவை (LPG) தடையின்றி வழங்குவதாக உறுதியளித்துள்ளதாக மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் தர்மேந்திர பிரதான் அண்மையில் அறிவித்தார். சவுதி எரிசக்தி அமைச்சர் இளவரசர் அப்துல் அஜீஸ் பின் சல்மானுடன் கலந்துரையாடிய பின்னர் அமைச்சர் இதனை அறிவித்தார்.

❖ நாடு முழுவதும் அமலில் இருக்கும் 21 நாள் நாடடங்கின் காரணமாக, சமையல் எரிவாயுவின் தேவை அதிகரித்துள்ள இந்த வேளையில், வரவிருக்கும் நாட்களில் உள்நாட்டு தேவையை பூர்த்திசெய்யும் நோக்கோடு, சவுதி அரேபியா, LPG வழங்கலை உறுதிப்படுத்தியுள்ளது.

8.நாடடங்கு உத்தரவின் மத்தியில் அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் நபர்களுக்கு இ-பாஸ் வழங்க, 'PRAGYAAM' என்னும் அலைபேசி செயலியை அறிமுகப்படுத்தியுள்ள மாநில அரசு எது?

அ. தெலுங்கானா

ஆ. ஒடிசா

இ. ஜார்கண்ட் ☑

ஈ. பஞ்சாப்

- 21 நாள் நாடடங்கு வேளையில், அத்தியாவசிய சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு இ–பாஸ் வழங்குவதற்காக ஜார்க்கண்ட் மாநில அரசு, 'PRAGYAAM' என்ற அலைபேசி செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது. COVID–19 பரவலை எதிர்த்து, 21 நாள் நாடு தழுவிய ஊரடங்கு உத்தரவை நாடு கடைபிடித்து வருகிறது. ஆண்ட்ராய்டு அடிப்படையிலான இச்செயலியின்மூலம் ஆவணங்களை சரிபார்த்து பதிவேற்றிய பிறகு, மாவட்ட போக்குவரத்து அதிகாரிகள் இ–பாஸ் வழங்குவார்கள்.

9. COVID–19'ஐ எதிர்த்துப் போராடுவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் பின்னணியில், சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற, 'CoNTeC' என்றால் என்ன?

அ. தொலை மருத்துவ மையம் ☑

ஆ. அலைபேசி செயலி

இ. மருந்துகள் வாங்குவதற்கான தளம்

ஈ. மருத்துவமனைகளின் தரவுத்தளம்

- மத்திய சுகாதார மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தன், அண்மையில், 'தேசிய தொலை ஆலோசனை மையம் (National Teleconsultation Centre – CoNTeC)' என்றவொன்றை தொடங்கினார். CoNTeC என்பது ஒரு தொலைமருத்துவ மையமாகும். இதனை, புது தில்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம் (AIIMS) செயல்படுத்தியுள்ளது. நாடு முழுவதிலுமுள்ள ஐயங்களைத் தீர்க்கவும் பதிலளிக்கவும் பல்வேறு துறைசார்ந்த மருத்துவர்கள் இம்மையத்தில் இருப்பார்கள்.

10. யுனைடெட் வங்கி மற்றும் ஓரியண்டல் வர்த்தக வங்கியுடன் இணைவதற்கு முன்னதாக தனது புதிய இலச்சினையை வெளியிட்டுள்ள இந்திய பொதுத்துறை வங்கி எது?

அ. பரோடா வங்கி

ஆ. பஞ்சாப் தேசிய வங்கி ☑

இ. கனரா வங்கி

ஈ. யூனியன் பேங்க் ஆப் இந்தியா

- யுனைடெட் வங்கி மற்றும் ஓரியண்டல் வர்த்தக வங்கியுடன் இணைவதற்கு முன்னதாக பஞ்சாப் தேசிய வங்கி தனது புதிய இலச்சினையை வெளியிட்டுள்ளது. இப்புதிய இலச்சினை, மூன்று பொதுத் துறை வங்கிகளின் சின்னங்களையும் கொண்டுள்ளது. திட்டமிட்டபடி 2020 ஏப்.1ஆம் தேதியன்று, பத்து வங்கிகளை நான்காக இணைக்கும் செயல்முறை மேற்கொள்ளப்படும் என இந்திய ரிசர்வ் வங்கி (RBI) அறிவிப்பை வெளியிட்டிருந்தது. ஒருங்கிணைப்பு செயல்முறைக்குப்பிறகு, பாரத ஸ்டேட் வங்கிக்குப் (SBI) பிறகு இந்தியாவின் இரண்டாவது மிகப்பெரிய கடன் வழங்குநராக பஞ்சாப் தேசிய வங்கி மாறும்.

நடப்பு நிகழ்வுகள்

1.இந்திய ரிசர்வ் வங்கியின் அறிவிப்பின்படி, பன்னாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் (FPI) பெருநிறுவன பத்திரங்களில் முதலீடு செய்வதற்கான புதிய வரம்பு என்ன?

அ. 10%

ஆ. 15% ☑

இ. 20%

ஈ. 25%

- இந்திய ரிசர்வ் வங்கியின் அண்மைய அறிவிப்பின்படி, 2020–21ஆம் நிதியாண்டுக்கான நிலுவையில் உள்ள பங்குகளில் பன்னாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் (FPI) பெருநிறுவன பத்திரங்களில் முதலீடு செய்வதற்கான புதிய வரம்பு 15 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. FPI'க்கள், தற்போதுவரை இந்திய பெருநிறுவன பத்திரங்களில் ₹3.17 இலட்சம் கோடியை முதலீடு செய்யலாம்.

- இந்த வரம்பை உயர்த்திய பின்னர், FPI'களால், பெருநிறுவன பத்திரங்களில், 2020 ஏப்ரல் – செப்டம்பர் வரையிலான அரையாண்டுக்கு ₹4.29 லட்சம் கோடியும், 2020 அக்டோபர் – மார்ச் 2021 வரையிலான அரையாண்டுக்கு ₹5.41 லட்சம் கோடியும் முதலீடு செய்யவியலும். FPI முதலீட்டிற்கான திருத்தப்பட்ட வரம்புகள், நடுவணரசு பத்திரங்கள் & மாநில வளர்ச்சிக்கடன்கள் என தனித்தனியாக அறிவிக்கப்படும்.

2.வட்டி சலுகை திட்டத்தின்கீழ், ஆண்டுக்கு 2 சதவீத மானியத்துடன் வழங்கப்படும் குறுகிய கால பயிர் கடனுக்கான வரம்பு என்ன?

அ. ரூ.1 இலட்சம்

ஆ. ரூ.2 இலட்சம்

இ. ரூ.3 இலட்சம் ☑

ஈ. ரூ.5 இலட்சம்

- COVID–19 நோய்த்தொற்று பாதிப்பால் நாடடங்கு அமல்படுத்தப்பட்டுள்ள சூழ்நிலையில் விவசாயிகளின் பயிர்க்கடன்களுக்கான வட்டி சலுகையை 2020 மே.31ஆம் தேதி வரையில் நீட்டிப்பதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட ₹3 இலட்சம் வரையிலான கடன்களில் திரும்பச் செலுத்தும் காலம் வந்துவிட்ட, அல்லது 2020 மார்ச்.1 முதல் 2020 மே.31ஆம் தேதி வரையில் திரும்பச் செலுத்தும் காலம் வரக்கூடிய கடன்களுக்கு இச்சலுகை நீட்டிப்பு கிடைக்கும். இந்தக்கடன்களுக்கான 2% வட்டிச்சலுகை மற்றும் உரிய காலத்தில் செலுத்தினால் 3% வட்டியை அளிப்பது ஆகிய திட்டங்கள் மேற்படி காலத்துக்கு நீட்டிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

- எனவே நீட்டிக்கப்பட்ட காலம் வரையில் விவசாயிகள் அபராதம் எதுவுமில்லாமல் 4 சதவீத வட்டியுடன் கடன்தொகையை திருப்பிச்செலுத்த இது உதவியாக இருக்கும்.

3.இன்சூரன்ஸ் ஆஸ்திரேலியா ஜெனரல் (IAG) தனது 26% பங்குகளை இந்தியாவின் எந்தக் காப்பீட்டு நிறுவனத்திடம் விற்றுள்ளது?

அ. SBI பொதுக்காப்பீடு ☑

ஆ. HDFC எர்கோ

இ. ICICI லோம்பார்ட்

ஈ. ஆதித்யா பிர்லா ஆயுள் காப்பீடு

❖ பாரத ஸ்டேட் வங்கியின் சமீபத்திய அறிவிப்பின்படி, ஆஸ்திரேலியாவின் இன்சூரன்ஸ் ஆஸ்திரேலியா ஜெனரல் ஆனது SBI பொதுக்காப்பீட்டிலிருந்து வெளியேறியுள்ளது. IAG, SBI பொதுக்காப்பீட்டில் அதன் 26 சதவீத பங்குகளை முறையே பிரேம்ஜி இன்வெஸ்ட் மற்றும் வார்பர்க் பிங்கஸ் குழுமத்தின் இணை நிறுவனங்களான நேபியன் ஆப்பர்சுனிட்டிஸ் மற்றும் WP ஹனி கோதுமை முதலீட்டு லிமிடெட் ஆகிய நிறுவனங்களுக்கு $310 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு (சுமார் ₹2,325 கோடி) விற்றது. SBI தனது காப்பீட்டு பிரிவில் 70 சதவீத பங்குகளை வைத்துள்ளது.

4.இந்திய மதிப்பீடுகளின்படி (Ind–Ra), 2020–21ஆம் நிதியாண்டிற்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி மதிப்பீடு என்ன?

அ. 2.6%

ஆ. 3.6% ☑

இ. 4.6%

ஈ. 5.6%

3.6%

❖ உள்நாட்டு மதிப்பீட்டு நிறுவனமான இந்தியா மதிப்பீடுகள் மற்றும் ஆராய்ச்சி (Ind–Ra) 2020–21ஆம் நிதியாண்டிற்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி கணிப்பை 3.6 சதவீதமாக மதிப்பீட்டு செய்துள்ளதாக அண்மையில் அறிவித்தது. இந்நிறுவனம் இதற்கு முன்னர், 2020–21ஆம் நிதியாண்டில் இந்தியாவின் வளர்ச்சி சதவீதம் 5.5 சதவீதமாக இருக்கும் என மதிப்பீடு செய்திருந்தது. COVID–19 நோய்த்தொற்று மற்றும் அதன் விளைவாக நாடு தழுவிய அளவில் அமல்படுத்தப்பட்ட 21 நாள் நாடடங்கு ஆகியவை இந்தப்பொருளாதார வீழ்ச்சிக்கும் சதவீத குறைப்புக்கும் காரணமாக கூறப்பட்டுள்ளது.

5.அண்மையில் காலமான ஜப்பானியர் கென் ஷிமுரா, தொடர்புடைய துறை எது?

அ. கேளிக்கை ☑

ஆ. வணிகம்

இ. அரசியல்

ஈ. ஆராய்ச்சி

❖ ஜப்பான் நாட்டைச்சார்ந்த மூத்த நகைச்சுவை நடிகரான கென் ஷிமுரா (70), COVID–19 நோய்த்தொற்று காரணமாக சமீபத்தில் காலமானார். கடந்த 1970ஆம் ஆண்டு முதல் அவர் கேளிக்கை ஊடகங்கள் சார்ந்து இயங்கி வந்தார்.

6.பன்னாட்டு ஒலிம்பிக் குழுமம், டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளை வரும் 2021 ஜூலை மாதத்திற்கு மாற்றியுள்ளது. பன்னாட்டு ஒலிம்பிக் குழுமத்தின் தலைமையகம் அமைந்துள்ள நாடு எது?

அ. கிரேக்கம்

ஆ. சுவிச்சர்லாந்து ☑

இ. இத்தாலி

ஈ. ஐக்கிய அமெரிக்க நாடுகள்

❖ கடந்த 2019ஆம் ஆண்டில், ஒலிம்பிக் போட்டிகளின் 125ஆவது ஆண்டுவிழாவில், பன்னாட்டு ஒலிம்பிக் குழுமம் தனது புதிய தலைமையகத்தை சுவிச்சர்லாந்தின் லாசேன் நகரத்திற்கு முறையாக மாற்றியது. இந்த ஜூலை மாதம் நடைபெறவிருந்த டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள், 2021 ஜூலை.23 – ஆக.8 வரை மாற்றப்படுவதாக பன்னாட்டு ஒலிம்பிக் குழுமம் (IOC) அறிவித்தது. மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டிகள் 2021 ஆக.24 – செப்.5 வரை நடத்தப்படும் என்றும் IOC அறிவித்தது.

7. UNCTAD'இன் அண்மைய அறிக்கையின்படி, சீனாவுடன் சேர்ந்து மந்தநிலையால் பாதிக்கப்படாத நாடு எது?

அ. இந்தியா ☑

ஆ. ஜப்பான்

இ. ஜெர்மனி

ஈ. சவுதி அரேபியா

❖ ஐ.நா வர்த்தக மற்றும் மேம்பாட்டு அமைப்பு (UNCTAD), "The COVID-19 Shock to Developing Countries: Towards a 'whatever it takes' programme for the 2/3 of the world's population being left behind" என்ற தலைப்பில் ஒரு பகுப்பாய்வு அறிக்கையை வெளியிட்டுள்ளது. அந்தப் பகுப்பாய்வின்படி, இந்தியாவும் சீனாவும் தவிர உலகப் பொருளாதாரம் இந்த ஆண்டு மந்தநிலைக்குச் செல்லும். கொரோனா வைரஸ் நோய்த்தொற்றால் பல டிரில்லியன் டாலர்கள் மதிப்புக்கு இழப்பு ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

8.ஆக்ரோனிஸ் நிறுவனத்தின், 'உலக இணையவெளிப் பாதுகாப்பு வார ஆய்வின்'படி, கடந்த ஆண்டில் தரவு இழப்பைச் சந்தித்த நிறுவனங்களின் சதவீதம் என்ன?

அ. 12 %

ஆ. 22 %

இ. 32 %

ஈ. 42 % ☑

❖ சுவிச்சர்லாந்தைச் சார்ந்த தொழில்நுட்ப நிறுவனமான ஆக்ரோனிஸ், அண்மையில், "2020 உலக இணையவெளிப் பாதுகாப்பு வார ஆய்வின்" தொடக்கப் பதிப்பை வெளியிட்டது. இந்த ஆய்வின்படி, கடந்த ஆண்டில் (2019) 42% நிறுவனங்கள் தரவு இழப்பைச் சந்தித்துள்ளன. தரவுப் பாதுகாப்புக்கான வழக்கமான உத்திகள், தனிநபர்கள் பற்றிய தகவல்களைப் பாதுகாப்பதற்கும், நிறுவனங்களின் தகவல்களைப் பாதுகாப்பதற்கும் இனி ஒத்துவராது என்பதையும் இந்த ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது.

9.இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) எந்தத் துணை ஆளுநரின் பதவிக்காலம் அண்மையில் ஓராண்டு காலத்திற்கு நீட்டிக்கப்பட்டது?

அ. N S விஸ்வநாதன்

ஆ. M K ஜைன்

இ. B P கனுங்கோ ☑

ஈ. மைக்கேல் தேவபிரதா பத்ரா

❖ இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) அன்மைய அறிவிப்பின்படி, ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநரான B P கனுங்கோவின் பதவிக்காலம், 2020 ஏப்ரல் 3 முதல் ஓராண்டு காலத்திற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. கடந்த 2017ஆம் ஆண்டில் துணை ஆளுநராக பொறுப்பேற்ற B P கனுங்கோவின் பதவிக்காலம், ஏப்.2ஆம் தேதியுடன் முடிவடைகிறது. தற்போது அவர், ஓராண்டு காலத்திற்கு மீண்டும் துணை ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். N S விஸ்வநாதன், M K ஜைன் மற்றும் மைக்கேல் தேவபிரதா பத்ரா ஆகியோர் இந்திய ரிசர்வ் வங்கியின் பிற துணை ஆளுநர்களாவர்.

10.எந்தத் தயாரிப்பை உற்பத்தி செய்வதற்காக, 'Scitech Park' என்றவொரு நிறுவனத்திற்கு ₹1 கோடியை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை வழங்கியுள்ளது?

அ. முகக்கவசம்

ஆ. கை தூய்மைப்படுத்தி

இ. காற்று தூய்மைபடுத்தி ☑

ஈ. செயற்கை மூச்சுக்கருவி

❖ அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது, 'Scitech Park' என்றும் அழைக்கப்படுகிற அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பூங்கா என்ற அடைவு நிறுவனத்திற்கு ₹1 கோடியை வழங்கியுள்ளது. புனேவைச் சார்ந்த, 'Scitech Park' ஒரு புதிய காற்று தூய்மைப்படுத்தி தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது.

❖ இது, COVID–19 நோய்த்தொற்றுக்கு எதிராக நாட்டின் தொடர்ச்சியான மீட்பு நடவடிக்கைகளின்போது பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 'Scitech Airon' எனப்படும் இப்புதிய தூய்மைப்படுத்தி எந்திரத்தின் உற்பத்தி அளவீடு செய்யப்படவுள்ளது. விரைவில் 1000 அலகுகள் மருத்துவமனைகளில் நிறுவப்படவுள்ளன.

நடப்பு நிகழ்வுகள்

1. 21 நாள் நாடடங்குக்கு இடையில், இந்தியாவில் சிக்கித்தவிக்கும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளுக்கு உதவுவதற்காக, 'Stranded India' என்ற வலைதளத்தை தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?

அ. வெளியுறவுத்துறை அமைச்சகம்

ஆ. சுற்றுலா அமைச்சகம் ☑

இ. உள்துறை அமைச்சகம்

ஈ. தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம்

❖ நடைமுறையில் உள்ள நாடடங்கு உத்தரவிற்கு இடையில், இந்தியாவில் சிக்கித்தவிக்கும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளுக்கு உதவுவதற்காக மத்திய சுற்றுலா அமைச்சகம், 'Strande India' என்ற புதிய இணையதளத்தை தொடங்கியுள்ளது. நாட்டில் சிக்கித்தவிக்கும் சுற்றுலாப்பயணிகளுக்கு இந்தியாவில் கிடைக்கப்பெறும் சேவைகள் குறித்த தகவல்களை பரப்புவதன்மூலம் அவர்களுக்கு உதவிகளை வழங்குவதை இந்த இணையதளம் நோக்கமாகக்கொண்டுள்ளது. உதவி எண்கள் மற்றும் அழைப்பு மையங்கள், வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டு மையங்கள் மற்றும் பிராந்திய ஆதரவு குறித்த தகவல்களை இந்த இணையத்தளம் தன்னகத்தே கொண்டுள்ளது.

2. 2020–21ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில், சிறுசேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி விகிதங்களில் திருத்தங்கள் மேற்கொண்ட பிறகு, செல்வமகள் சிறுசேமிப்புத் திட்டத்திற்கான வட்டி விகிதம் எவ்வளவு சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது?

அ. 8.2 %

ஆ. 8.0 %

இ. 7.8 %

ஈ. 7.6 % ☑

7.6%

❖ 2020–21ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் பல்வேறு சிறுசேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி விகிதங்களை இந்திய அரசாங்கம் குறைத்துள்ளது. இந்தத்திருத்தங்களின்படி, செல்வமகள் சிறுசேமிப்பு திட்டத்துக்கான வட்டி விகிதம் 8.4 சதவீதத்திலிருந்து 7.6 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. பொது வருங்கால வைப்பு (PPF) முதலீடுகள் 7.9 சதவீதத்திலிருந்து 7.1 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

❖ ஐந்தாண்டு தேசிய சேமிப்புச் சான்றிதழ் திட்டத்துக்கான வட்டி விகிதம் முந்தைய 7.9 சதவீதத்திலிருந்து 6.8 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. கிசான் விகாஸ் பத்திர திட்டத்துக்கான வட்டி விகிதம் முந்தைய 7.6 சதவீதத்திலிருந்து 6.9 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. ஐந்தாண்டு மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டத்துக்கான வட்டி விகிதங்கள் 8.6 சதவீதத்திலிருந்து 7.6 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

3.எந்த நாட்டின் தலைமையின்கீழ், இரண்டாவது அவசரகால G20 நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களின் கூட்டம் நடைபெற்றது?

அ. ஜப்பான் ஆ. சீனா

இ. சவுதி அரேபியா ☑ ஈ. இந்தியா

G20
SAUDI ARABIA 2020

- ❖ இரண்டாவது அவசரகால G20 நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களின் கூட்டம், சமீபத்தில், சவுதி அரேபியாவின் தலைமையின்கீழ் காணொலிக்காட்சிமூலம் ஏற்பாடு செய்யப்பட்டது.

- ❖ இந்தக் கூட்டத்தில், மத்திய நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சரான நிர்மலா சீதாராமன் பங்கேற்றார். இதன்போது உலகளாவிய பொருளாதாரம் & சந்தைகளில் COVID–19 நோய்த்தொற்றின் தாக்கம் குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும், உலகளாவிய இச்சவாலுக்கு பதிலளிக்கும் வகையிலான முயற்சிகளையும் இந்தக் கூட்டம் ஒருங்கிணைத்தது. பன்னாட்டுச் செலாவணி நிதியத்தின் கருவித் தொகுப்பை மதிப்பாய்வு செய்து அதனை மேம்படுத்துமாறு நிதியமைச்சர் அப்போது கேட்டுக்கொண்டார்.

4. 'East Asia and Pacific in the Time of COVID–19' என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்டுள்ள பன்னாட்டு அமைப்பு எது?

அ. உலக வங்கி ☑

THE WORLD BANK

ஆ. ஆசிய வளர்ச்சி வங்கி

இ. பன்னாட்டு செலவாணி நிதியம்

ஈ. ஐக்கிய நாடுகள் அவை

- ❖ COVID–19 நோய்த்தொற்றின் காரணமாக கிழக்காசியாவிலும் பசிபிக் பகுதியிலும் சுமார் 13 மில்லியன் மக்கள் வறுமையால் பீடிக்கப்படுவார்கள் என, 'East Asia and Pacific in the Time of COVID–19' என்ற தலைப்பில் உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவித்துள்ளது. 2020ஆம் ஆண்டில் கிழக்காசியா மற்றும் பசிபிக் பகுதிகளில், சுமார் 35 மில்லியன் மக்கள் வறுமையிலிருந்து மீளுவார்கள் என இதற்கு முந்தைய அறிக்கையில் உலக வங்கி மதிப்பிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

5.அனைத்து தனியார் வங்கி மற்றும் வெளிநாட்டு வங்கிகளும் அதன் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அதிகாரியை மறுநியமனம் செய்தால் அதனை எத்தனை மாதங்களுக்கு முன்பே தெரிவிக்க வேண்டுமென இந்திய ரிசர்வ் வங்கியின் புதிய நிபந்தனை கூறுகிறது?

அ. மூன்று

ஆ. நான்கு

இ. ஆறு ☑

6

ஈ. எட்டு

- ❖ இந்திய ரிசர்வ் வங்கியின் புதிய நிபந்தனையின்படி, அனைத்து தனியார் துறை மற்றும் வெளிநாட்டு வங்கிகளும் அதன் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாகிகளை மறு நியமனம் செய்வது தொடர்பாக ரிசர்வ் வங்கியிடம் ஆறு மாதங்களுக்கு முன்பே தெரிவிக்க வேண்டும் என புதிய இந்திய ரிசர்வ் வங்கியின் புதிய நிபந்தனை தெரிவித்துள்ளது. முன்னதாக இந்த நடைமுறை நான்கு மாதங்கள் என்ற கால அளவில் இருந்தது.

- ❖ மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரிகளின் புதிய நியமனங்களில் தெரிவிக்க வேண்டிய பெயர்களின் எண்ணிக்கையும் மூன்றிலிருந்து இரண்டாக குறைக்கப்பட்டுள்ளது.

6.21 நாள் நாடடங்குக்கு இடையே, சமீபத்தில், வாட்ஸப்பில் வங்கிச்சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ள இந்திய தனியார் துறை வங்கி எது?

அ. எச்டிஎஃப்சி வங்கி

ஆ. ஐசிஐசிஐ வங்கி ☑

இ. ஆக்ஸிஸ் வங்கி

ஈ. எஸ் வங்கி

ICICI Bank

❖ COVID–19 நோய்த்தொற்று ஊரடங்கு அமலிலுள்ள சூழலில், ஐசிஐசிஐ வங்கி இலவச வாட்ஸப் வங்கிச் சேவையை தொடங்கியுள்ளது. ஐசிஐசிஐ வங்கியின் வாடிக்கையாளர்கள் மட்டுமல்லாது அத்தனை வாடிக்கையாளர்களும் இந்தச் சேவையைப் பயன்படுத்த முடியும்.

❖ வங்கிக்கணக்கு இருப்பு, கடைசி 3 பரிவர்த்தனைகள், கடனட்டை வரம்பு, தடுப்பு வசதிகள் உள்ளிட்ட அத்தனை வங்கிசார்ந்த சேவைகளையும் வாட்ஸப் மூலமாகவே பெறமுடியும். கூடுதலாக அருகிலுள்ள மூன்று ஐசிஐசிஐ வங்கிகள் மற்றும் ATM மையங்களின் விவரமும் வாட்ஸப் மூலமாகவே கிடைக்கும். வங்கியில் பதியப்பட்ட அலைபேசி எண்ணிலிருந்து '9324953001' என்ற எண்ணுக்கு 'Hi' என அனுப்புவதன்மூலம், ஐசிஐசிஐ வங்கியின் சேவைகளைப் பெறலாம்.

7. 2021ஆம் ஆண்டு மார்ச் வரை நீட்டிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை, எந்த ஆண்டில் நடைமுறைக்கு வந்தது?

அ. 2015 ☑

ஆ. 2016

இ. 2017

ஈ. 2018

2015

❖ இந்திய அரசின் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையில் (Foriegn Trade Policy) மத்திய வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் மாறுதல்களை அறிவித்துள்ளது. 2015ஆம் ஆண்டு ஏப்.1ஆம் தேதி அமலுக்கு வந்த தற்போதைய கொள்கை, 2020 மார்ச் 31 வரையிலான காலம் வரையில் ஐந்தாண்டுகளுக்கு செல்லத்தக்கதாக இருந்தது.

❖ புதிய COVID–19 நோய்த்தொற்று காரணமாக எழுந்துள்ள முன்னெப்போதும் இல்லாத சூழ்நிலையில், பல்வேறு ஏற்றுமதி ஊக்குவிப்புத் திட்டங்களின்கீழ் அளிக்கப்படும் நிவாரணங்களைத் தொடர்வதற்கு அரசு முடிவுசெய்துள்ளது. இந்தக் கொள்கையை மேலும் ஓராண்டு காலத்துக்கு, அதாவது 2021 மார்ச் 31ஆம் தேதி வரையில் நீட்டிப்பதன் மூலம் இந்தச்சலுகைகளைத் தொடர முடிவுசெய்யப்பட்டுள்ளது.

8.நேரடி வரிவிதிப்பு முறையில் மேற்கொள்ளப்பட்ட அண்மைய மாற்றங்களின்படி, வெளிநாடுவாழ் இந்தியர்கள், இந்தியாவில் வரிசெலுத்துவோராக தகுதிபெறுவதற்கு, இந்தியாவில் எத்தனை நாட்கள் வசித்திருக்க வேண்டும்?

அ. 120 ☑ ஆ. 150

இ. 175 ஈ. 200

120

❖ 2020 ஏப்ரல் 1 முதல் நிதிச்சட்டத்தில் மாற்றங்களுடன் இந்தியாவின் நேரடி வரிவிதிப்பு முறையில் பல மாற்றங்கள் நடைமுறைக்கு வந்தன. இதன் பிரதான மாற்றம் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கானதாக உள்ளது. இந்தியாவில் தொழில்புரிந்து அதன்மூலம் 15 இலட்சத்துக்கும் அதிகமான வருமானம் ஈட்டிய வெளிநாடுவாழ் இந்தியர்கள், 120 நாட்களுக்கு இந்தியாவில் தங்கியிருந்தால் அவர்கள் வரிவிதிப்பு நோக்கத்திற்காக, இந்திய குடிமகன்களாக கருதப்படுவார்கள். இந்த நாள் எண்ணிக்கை, இதற்குமுன் 182 என இருந்தது குறிப்பிடத்தக்கது.

9.வணிகர்களுக்கான முதல் COVID-19 காப்பீட்டுத் திட்டத்தைத் தொடங்குவதற்காக ICICI லோம்பார்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்துள்ள கொடுப்பனவு நிறுவனம் எது?

அ. பாரத்பே ☑

ஆ. போன்பே

இ. பேடிஎம்

ஈ. மொபிக்விக்

BharatPe

❖ உள்நாட்டு கொடுப்பனவு நிறுவனமான பாரத்பே, ஐசிஐசிஐ லோம்பார்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் நிறுவனத்துடன் கூட்டுசேர்ந்து நாட்டின் முதல் COVID-19 (கொரோனா வைரஸ்) காப்பீட்டுத்திட்டத்தை வணிகர்களுக்காக அறிமுகப்படுத்தியுள்ளது. பாரத்பே திறன்பேசி செயலியிலிருந்து பெறக்கூடிய இந்தக் காப்பீட்டு திட்டமானது, நாடடங்குக்கு இடையே COVID-19 நோய்த்தொற்றுக்கு ஆளாகக்கூடிய சுமார் 40 இலட்சம் வணிகர்களை உள்ளடக்குவதை நோக்கமாகக்கொண்டுள்ளது.

❖ ₹199 என்ற காப்பீட்டுத் தொகையுடன் ஓராண்டுக்கு ₹25,000 வரை காப்பீடு வழங்கக்கூடிய இந்தக் காப்பீட்டுத் திட்டம், COVID-19 நோய்த்தொற்றால் காப்பீடு பெற்ற வணிகர் ஒருவர் பாதிக்கப்பட்டால், 100% காப்பீட்டுத் தொகையை வழங்குகிறது.

10.ஏப்ரல்.1 அன்று, மாநில நாளை, 'உத்கல் திவாஸ்' எனக் கொண்டாடும் மாநிலம் எது?

அ. ராஜஸ்தான்

ஆ. ஒடிசா ☑

இ. குஜராத்

ஈ. கர்நாடகா

❖ இந்திய மாநிலமான ஒடிசா, கடந்த 1936 ஏப்.1ஆம் தேதி உருவாக்கப்பட்டது. அதன் மாநில நாள், உத்கல் திவாஸ் எனவும் அழைக்கப்படுகிறது. இந்நாளின் கொண்டாட்டங்கள், அம்மாநிலத்திலும் நாடுமுழுவது -ம் கொண்டாடப்படுகிறது. முந்தைய பீகார் & ஒரிசா மாகாணத்திலிருந்து, ஒடிசா ஒரு தனி மாநிலமாக உருவானதன் நினைவாக இந்நாள் கொண்டாடப்படுகிறது. COVID-19 நோய்த்தொற்று காரணமாக நடைமுறையிலிருக்கும் நாடடங்கால், இந்நாள்குறித்த கொண்டாட்டங்கள் எதுவும் அந்த மாநிலத்தில் ஏற்பாடு செய்யப்படவில்லை.

நடப்பு நிகழ்வுகள்

1.இந்தியாவுக்கும் எந்த நாட்டுக்கும் இடையில் அரசியல் தொடர்புகள் நிறுவப்பட்ட 70ஆவது ஆண்டுவிழா அண்மையில் ஏப்ரல்.1 அன்று கொண்டாடப்பட்டது?

அ. தாய்லாந்து

ஆ. சீனா ☑

இ. ஜப்பான்

ஈ. நேபாளம்

- ❖ இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே அரசியல் ரீதியான உறவுகள் ஏற்படுத்தப்பட்ட 70ஆவது ஆண்டு விழா ஏப்.1ஆம் தேதியன்று கொண்டாடப்பட்டது. மத்திய வெளியுறவு அமைச்சகத்தின் வெளியீட்டின்படி, இந்திய குடியரசுத்தலைவர், சீன அதிபர், இருநாட்டு பிரதமர்கள் மற்றும் வெளிவிவகார அமைச்சர்கள் ஆகியோர் 70ஆவது ஆண்டு நிறைவு குறித்த வாழ்த்துச் செய்திகளை பரிமாறிக்கொண்டனர். 1950 ஏப்.1 அன்று, சீன மக்கள் குடியரசுடன் அரசியல் ரீதியான உறவுகளை ஏற்படுத்திய ஆசிய கண்டத்தின் முதல் பொதுவுடைமை கொள்கைகளைப் பின்பற்றாத நாடாக இந்தியா ஆனது.

2. 15 ஆண்டுகள் வசித்தவர் / 7 ஆண்டுகள் கல்வி பயின்ற ஒருவருக்கு குடியிருப்புரிமையை (domicile) நீட்டிப்பதற்கான நடுவணரசின் விதி, இந்தியாவின் எந்த மாநிலம் / யூனியன் பிரதேசத்துக்கானதாகும்?

அ. மிசோரம்

ஆ. நாகாலாந்து

இ. ஜம்மு மற்றும் காஷ்மீர் ☑

ஈ. சத்தீஸ்கர்

- ❖ ஜம்மு–காஷ்மீர் சிவில் சேவைகள் (பரவலாக்கம் மற்றும் ஆட்சேர்ப்பு) சட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட புதிய அரசிதழ் அறிவிப்பின்படி, ஜம்மு–காஷ்மீரில் குறைந்தது 15 ஆண்டுகள் வசித்து வந்த ஒருவர் அந்த யூனியன் பிரதேசத்தின் குடியிருப்புரிமையைப் பெறுவதற்கு தகுதியுடையவராவார். அந்த யூனியன் பிரதேசத்தைச் சார்ந்த ஒரு கல்வி நிறுவனத்தில் ஏழு ஆண்டுகள் கல்விபயின்று, 10 அல்லது 12ஆம் வகுப்புத்தேர்வில் தேர்ச்சி பெற்றவரும் அந்த யூனியன் பிரதேசத்தின் குடியிருப்புரிமையைப் (domicile) பெறுவதற்கு தகுதியுடையவராவார்.

3.தேசிய புலனாய்வு முகமையானது (NIA), எந்த நாட்டில் அமைந்துள்ள குருத்வாரா மீதான பயங்கரவாத தாக்குதல் தொடர்பான அதன் முதல் அயல்நாட்டு வழக்கை விசாரிக்கவுள்ளது?

அ. பாகிஸ்தான்

ஆ. ஆப்கானிஸ்தான் ☑

இ. நேபாளம்

ஈ. சிங்கப்பூர்

- ❖ தேசிய புலனாய்வு முகமை (NIA) தனது முதல் அயல்நாட்டு வழக்கை பதிவுசெய்து, ஆப்கானிஸ்தானின் காபூலில் அமைந்துள்ள ஒரு குருத்வாரா மீதான பயங்கரவாத தாக்குதல் குறித்த விசாரணையை தொடங்கியுள்ளது. 2020 மார்ச்.25 அன்று துப்பாக்கி ஏந்திய சிலர், காபூலில் உள்ள ஒரு குருத்வாராவில் நுழைந்து, துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் 27 பேர் பலியாகினர் மற்றும் பலர் காயமடைந்தனர்.

- ❖ அண்மையில் NIA சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள், இந்திய நாட்டின் குடிகளுக்கு எதிரான வழக்குகளை விசாரிக்க அல்லது இந்தியாவுக்கு வெளியே உள்ள இடங்களில் நடக்கும் இந்தியாவின் நலனை பாதிக்கும் வழக்குகளை விசாரிக்க NIA'வுக்கு அனுமதியளிக்கின்றன.

4.புனேவில் அறிமுகப்படுத்தப்பட்ட, COVID-19 நோய்த்தொற்றுக்கான உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்தியாவின் முதல் சோதனைக் கருவியின் பெயர் என்ன?

அ. Patho Detect ☑

ஆ. Covid Detect

இ. India Detect

ஈ. Mylab Detect

- ❖ வைரஸ் நிபுணர் மினல் தகாவே போசலே தலைமையிலான புனேவைச்சார்ந்த, 'MyLab Discvery'இன் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்குழு, COVID-19 (கொரோனா) நோய்த்தொற்றுக்கான உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்தியாவின் முதல் சோதனைக்கருவியை வடிவமைத்துள்ளது.

- ❖ ஆறு வாரகாலத்துக்குள் உருவாக்கப்பட்டுள்ள இந்தக்கருவி, 'Patho Detect' என்று அழைக்கப்படுகிறது. பொதுவாக இதுபோன்ற சோதனைக்கருவிகளை உருவாக்க 3-4 மாதங்களாகும். 'MyLab Discvery' என்பது ஒரு மூலக்கூறு கண்டறி நிறுவனமாகும். இது, COVID-19 சோதனைக்கருவிகளை தயாரித்து விற்பனை செய்ய முழு ஒப்புதல்பெற்ற முதல் இந்திய நிறுவனமாகும்.

5.ரிசர்வ் வங்கியின் சமீபத்திய அறிவிப்பின்படி, ஜூலை.31 வரை வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கு விற்கப்பட்ட பொருள்களுக்கான தொகையை, ஏற்றுமதியாளர்கள் வசூலித்துக்கொள்வதற்கான புதிய கால அவகாசம் என்ன?

அ. 9 மாதங்கள்

ஆ. 12 மாதங்கள்

இ. 15 மாதங்கள் ☑

ஈ. 18 மாதங்கள்

- ❖ COVID-19 நோய்த்தொற்றால் இந்தியாவில் ஏற்பட்டுள்ள விளைவுகளைச் சமாளிப்பதற்காக ஏற்றுமதி -யாளர்களுக்கான சிறப்புச் சலுகைகளை ரிசர்வ் வங்கி (RBI) அறிவித்துள்ளது. அதன்படி, வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கு விற்கப்பட்ட பொருள்களுக்கான தொகையை வசூலிப்பதற்கான கால அவகாசத்தை இந்திய ரிசர்வ் வங்கி நீட்டித்துள்ளது.

- ❖ ஜூலை.31 வரை வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கு பொருள்களை ஏற்றுமதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களுக்கான தொகையை இந்தியாவுக்குக்கொண்டுவருவதற்கான கால

அவகாசம், ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து 15 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள விதிகளின்படி வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்த பொருள்களுக்கான தொகையை 9 மாதங்களுக்குள் ஏற்றுமதியாளர்கள் இந்தியாவுக்குக்கொண்டுவரவேண்டும்.

- ❖ மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் வருவாய் பற்றாக்குறை ஏற்படும்போது, அவை ரிசர்வ் வங்கியிலிருந்து தற்காலிகமாகக் கடன்பெறும் வசதி உள்ளது. அந்தக்கடனில், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் பெற விரும்பும் முன்தொகைக்கான உச்சவரம்பை 30%ஆக உயர்த்துவதாக RBI தெரிவித்தது. இந்த உச்சவரம்பு ஏப்ரல் 1ஆம் தேதி முதல் செப்டம்ர்.30ஆம் தேதி வரை அமலில் இருக்கும் என்றும் RBI தெரிவித்துள்ளது.

6.21 நாள் நாடடங்குக்கு இடையே, நாடு முழுவதும் மருத்துவம் சார்ந்த பொருட்கள் விநியோகிப்பை நோக்கமாகக்கொண்டுள்ள, உள்நாட்டு வான்போக்குவரத்து அமைச்சகத்தின் முன்னெடுப்பின் பெயர் என்ன?

அ. Corona Udan

ஆ. Lifeline Udan ☑

இ. Medico Udan

ஈ. COVID-19 Udan

- ❖ இந்தியாவின் COVID–19 நோய்த்தொற்றுக்கு எதிரான போரின் ஒருபகுதியாக, நாடு முழுவதும் மற்றும் அதற்கு அப்பாலும் மருத்துவ மற்றும் அத்தியாவசியப்பொருள்களைக் கொண்டுசெல்வதற்காக, சிவில் விமானப்போக்குவரத்து அமைச்சகம், "லைப்லைன் உதான்" விமானப் போக்குவரத்தை இந்திய அரசு தொடங்கியுள்ளது. "லைப்லைன் உதான்" நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள விமானப் போக்குவரத்துச் சேவை நிறுவனங்களுள் ஏர் இந்தியா, அலையன்ஸ் ஏர், இந்திய விமானப்படை மற்றும் பவன் ஹான்ஸ் ஆகியவை அடங்கும். தில்லி, மும்பை, ஹைதராபாத், பெங்களூரு மற்றும் கொல்கத்தாவில் இதற்கான சரக்கு முனையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

7.நடப்பாண்டு (2020) உலக மதியிறுக்க விழிப்புணர்வு நாளுக்கான கருப்பொருள் என்ன?

அ. Assistive Technologies

ஆ. The Transition to Adulthood ☑

இ. Together we can

ஈ. Autism is not a disease

- ❖ உலக மதியிறுக்க விழிப்புணர்வு நாளானது (World Autism Awareness Day) ஒவ்வோர் ஆண்டும் ஏப்.2 அன்று கடைபிடிக்கப்படுகிறது. மதியிறுக்கம் என்பது, பல்வேறு வகையான மூளை வளர்ச்சிக் குறைபா –டுகளைக்கொண்ட ஒரு நோயாகும். மதியிறுக்கம் என்னும் மூளை வளர்ச்சிக்குறைபாட்டால் பாதிக்கப் –பட்டவர்களை எப்படி கையாளவேண்டும், எந்த முறையில் அனுசரித்து நடந்துகொள்ளவேண்டும் என்பதை உணர்த்தும் வகையில் இந்நாள் அனுசரிக்கப்படுகிறது. "The Transition to Adulthood" என்பது நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

8.அண்மையில் காலமான, காந்தவியல் மற்றும் மீகடத்துத்திறன் குறித்த பணிகளுக்காக நோபல் பரிசு பெற்ற இயற்பியலாளரின் பெயரென்ன?

அ. ஆடம் ஷெல்சிங்கர்

ஆ. பிலிப் ஆண்டர்சன் ☑

இ. சர் ஜேம்ஸ் கோவன்ஸ்

ஈ. வின்சென்ட் மார்செல்லோ

❖ நோபல் பரிசு பெற்ற இயற்பியலாளர் பிலிப் ஆண்டர்சன் (96) சமீபத்தில் அமெரிக்காவில் காலமானார். காந்தவியல் & மீகடத்துத்திறன்பற்றி அறிவியல் சமூகம் புரிந்துகொள்ளவும், திடநிலை இயற்பியலை ஒரு துறையாகத் தொடங்கியதற்காகவும் அவர் அறியப்பட்டார். பிரையன் ஜோசப்சன் (1973) மற்றும் F டங்கன் ஹால்டேன் (2016) உள்ளிட்ட பிற நோபல் பரிசுபெற்ற இயற்பியலாளர்களுக்கு அவர் ஓர் ஊக்க முகமாக இருந்தார்.

9.ஏப்ரல் 2020 நிலவரப்படி, ஐ.நா பாதுகாப்பு அவையின் தலைவர் பதவியைக் கொண்டுள்ள நாடு எது?

அ. சீனா

ஆ. டொமினிகன் குடியரசு ☑

இ. அர்ஜென்டினா

ஈ. பிரான்ஸ்

❖ ஐ.நா பாதுகாப்பு அவையின் தற்போதைய தலைவராக டொமினிகன் குடியரசு உள்ளது. இது, ஏப்ரல் மாதத்தில், சீனாவிடமிருந்து இந்த அவையின் தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டது. டொமினிகன் குடியரசின் தூதரின் கூற்றுப்படி, 15 நாடுகள்கொண்ட இந்த அவை, அடுத்த வாரத்திற்கு முன்பாக முதல் முறையாக கூடி, தற்போதைய COVID–19 நோய்த்தொற்று குறித்து விவாதிக்கவுள்ளது.

❖ COVID–19 நோய்த்தொற்று உலகைத்தாக்கி, கடுமையான சேதத்தை ஏற்படுத்தியதிலிருந்து இந்நாள் வரை, இந்த அவை ஒரு கூட்டம்கூட நடத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

10.முக்கியமான மருத்துவப்பொருட்களைக் கொண்டுசெல்வதற்காக, இந்திய அரசாங்கம், சமீபத்தில் எந்த நாட்டோடு, "சரக்கு விமானப்பாலம்" ஒன்றை அமைத்துள்ளது?

அ. இலங்கை

ஆ. நேபாளம்

இ. சீனா ☑

ஈ. வங்கதேசம்

❖ இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில், 'சரக்கு விமானப்பாலம்' அமைப்பதாக இந்திய அரசு சமீபத்தில் அறிவித்தது. இவ்விமானப்பாலம் இருநாடுகளுக்கும் இடையே முக்கியமான மருத்துவப்பொருட்களைக் கொண்டுசெல்வதற்கு, வழக்கமான சரக்கு விமானங்களைப்பயன்படுத்தும். இம்முயற்சி ஏப்.3 முதல் ஏர் இந்தியாமூலம் இயக்கப்பட்டு வருகிறது. இது மத்திய உள்நாட்டு வான்போக்குவரத்து அமைச்சகத்தின் "லைப்லைன் உதான்" முயற்சியின்கீழ் செயல்படுத்தப்படுகிறது.

நடப்பு நிகழ்வுகள்

1. COVID–19 நோய்த்தொற்று ஏற்படும் அபாயம் தங்களுக்கு உள்ளதா என மக்கள் தங்களைத் தாங்களே மதிப்பீடு செய்துகொள்வதற்காக இந்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ள செயலியின் பெயர் என்ன?

அ. பாரத் கொரோனா

ஆ. இந்தியா போராடுகிறது

இ. ஆரோக்கிய சேது ☑

ஈ. கொவிட் இந்தியா

❖ COVID–19 நோய்த்தொற்றுக்கு எதிரான உறுதியான போராட்டத்தில், இந்திய மக்கள் அனைவரையும் ஒருங்கிணைப்பதற்காக, அரசு–தனியார் கூட்டு முயற்சியில் அலைபேசி செயலி ஒன்றை இந்திய அரசு வெளியிட்டுள்ளது. "ஆரோக்கிய சேது" என்ற இந்தச் செயலி, டிஜிட்டல் இந்தியாவில் இணைந்துள்ளது. COVID–19 நோய்த்தொற்று ஏற்படும் அபாயம் தங்களுக்கு உள்ளதா என மக்கள் தங்களைத் தாங்களே மதிப்பீடு செய்துகொள்வதற்கு இந்தச் செயலி உதவும்.

❖ ஒருவர் மற்றவர்களுடன் எவ்வாறு கலந்து பழகுகிறார்கள் தொடர்பு கொண்டிருக்கிறார்கள்; எந்த அளவிற்கு நவீன புளூடூத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறார்கள்; கணிப்பு நெறிகள், செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இது கணக்கிடப்படும். கூகுள் பிளே ஸ்டோர் மற்றும் ஆப்பிள் ஸ்டோர் ஆகியவற்றில் இந்தச் செயலி கிடைக்கப்பெறுகிறது.

2. 2021ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள ஐக்கிய நாடுகளின் COP 26 காலநிலை மாற்றம் குறித்த உச்சிமாநாடு, எந்த நகரத்தில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது?

அ. டோக்கியோ

ஆ. பாரிஸ்

இ. கிளாஸ்கோ ☑

ஈ. ரியாத்

❖ ஐக்கிய நாடுகளின் COP 26 காலநிலை மாற்றம் குறித்த உச்சிமாநாடு 2020ஆம் ஆண்டு நவம்பரில் ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரத்தில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. உலகளாவிய COVID–19 நோய்த் தொற்றுக்கு இடையே, காலநிலை மாற்றம் குறித்த இவ்வுச்சிமாநாடு, எதிர்வரும் 2021ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மறுதிட்டமிப்பட்ட இம்மாநாட்டின் சரியான தேதி பின்னர் முடிவுசெய்யப்படும் என பிரிட்டிஷ் அரசு அறிவித்துள்ளது. இங்கிலாந்து மற்றும் இத்தாலியுடன் இணைந்து UNFCC'இன் COP பணியகம் இந்த முடிவை எடுத்துள்ளது.

3.நாடடங்கு உத்தரவிற்கு மத்தியில், தேசிய வேளாண் சந்தை (இ–நாம்) தளத்தின் புதிய அம்சங்களை மத்திய வேளாண் அமைச்சர் அறிமுகப்படுத்தினார். இந்தியாவில், இ–நாம் தொடங்கப்பட்ட ஆண்டு எது?

அ. 2000 ஆ. 2005

இ. 2016 ☑ ஈ. 2019

- விவசாயிகள் தாங்கள் விளைவித்த பொருட்களை, நேரடியாக மொத்தவிலை மண்டிகளுக்கு கொண்டு வந்து விற்பனை செய்யும் சிரமத்தைக் குறைக்கும் வகையிலும், வேளாண் சந்தைப்படுத்துதலை வலுப்படுத்தும் வகையிலும் 2016 ஏப்ரல் 14 அன்று தொடங்கப்பட்ட இ–நாம் என்னும் மின்னணு தேசிய வேளாண் சந்தை தளத்தில் புதிய அம்சங்களை மத்திய விவசாயம், விவசாயிகள் நலன், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத் ராஜ் அமைச்சர் நரேந்திர சிங் தோமர் தொடங்கிவைத்தார்.

- இதில், (1) உணவுக்கிடங்கு அடிப்படையிலான இ–நாம் மென்பொருளில், e–NWR என்னும் உணவுக் கிடங்குகள் அடிப்படையிலான வர்த்தகத்துக்கு வழிசெய்யப்படும். (2) இ–நாம் முறையில் FPO வர்த்தக முறையில், அவை சேகரிப்பு மையங்களில் திரட்டிய பொருட்களை வேளாண் உற்பத்தி சந்தைக்கு கொண்டுவராமல், வர்த்தகம் செய்ய முடியும்.

- மேலும், இந்நிலையில், விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பொருட்களை ஏற்றிச்செல்வதற்கான போக்குவ–ரத்து வசதிகளைப் பெறும் வகையில், மண்டிகளுக்கு இடையிலும், மாநிலங்களுக்கு இடையிலும், சர–க்குப் போக்குவரத்து முறையை அதிகரிக்க இதில் வழி செய்யப்பட்டுள்ளது. இந்த இ–நாம் தளத்தில், 16 மாநிலங்கள் & 2 யூனியன் பிரதேசங்களில் உள்ள 585 மண்டிகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

4.ஓர் அண்மைய ஆய்வின்படி, இந்தியர்களில் நான்கில் ஒருவர், செய்திகளுக்காக கட்டணம் செலுத்தி வருகின்றனர். இந்த ஆய்வை நடத்திய பன்னாட்டு அமைப்பு எது?

அ. உலக பொருளாதார மன்றம் ☑

ஆ. உலக வங்கி

இ. பன்னாட்டு செலவாணி நிதியம்

ஈ. UNCTAD

- உலக பொருளாதார மன்றம் அண்மையில் நடத்திய ஓர் ஆய்வின்படி, இந்தியாவில் நான்கில் ஒருவர் செய்திகளை அறிந்துகொள்வதற்காக கட்டணஞ்செலுத்திவருகிறார்கள். ஆனால், கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கு மக்கள் தற்போது இதற்காக கட்டணஞ்செலுத்த தயாராகவுள்ளனர்.

- தற்போதைய COVID–19 (கொரோனா வைரஸ்) நோய்த்தொற்றுக்கு இடையே ஊடகங்களின் பங்கு சமூகத்தில் இன்றியமையாததாகிவிட்டன. உலக பொருளாதாரமன்றமானது இந்தியா, சீனா, ஜெர்மனி, தென்கொரியா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட 6 சந்தைகளில் செய்தி & பொழுதுபோக்கு நுகர்வோர் குறித்த ஓர் ஆய்வை நடத்தியது. அறுபது சதவீத நுகர்வோர் ஊடக சேவைக்காக பதிவு செய்துள்ளனர் என்பதையும் இந்த ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது.

5. COVID–19 நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டு, சமீபத்தில் காலமான இந்திய வம்சாவளியைச் சார்ந்த கீதா இராம்ஜி, தொடர்புடைய தொழில் எது?

அ. பொருளாதார நிபுணர்

ஆ. நச்சுயிரியல் வல்லுநர் ☑

இ. விளையாட்டு வீராங்கனை

ஈ. வணிக நபர்

- இந்திய வம்சாவளியைச் சார்ந்த நச்சுயிரியல் வல்லுநர் கீதா ராம்ஜி, தென்னாப்பிரிக்காவில் COVID–19 நோய்த்தொற்று காரணமாக காலமானார். இவர் ஒரு மூத்த நச்சுயிரியல் வல்லுநரும், HIV தடுப்பு ஆராய்ச்சியில் தலைவராகவும் இருந்தார். டர்பனில் அமைந்துள்ள தென்னாப்பிரிக்க மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் அலுவலகங்களின் HIV தடுப்பு ஆராய்ச்சி பிரிவின் பிரிவு இயக்குநராகவும் இவர் இருந்தார். ஐரோப்பிய மருத்துவ சோதனைகள் வளர்ச்சி கூட்டாண்மை இவருக்கு, "சிறந்த பெண் அறிவியலாளர் விருது" வழங்கி கௌரவித்துள்ளது.

6.அண்மையில் மூடப்பட்ட, 'Neighbourly' என்ற செயலி, தொடக்கத்தில் எந்தத்தொழில்நுட்ப நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது?

அ. கூகுள் ☑

ஆ. மைக்ரோசாப்ட்

இ. யாஹூ

ஈ. பேஸ்புக்

- கூகுள் நிறுவனம் அண்மையில் அதன் அண்டை சமூக செயலியான, 'Neighbourly'இன் சேவைகளை நிறுத்தியது. இச்செயலியின் முழுமையான சேவை, 2020 மே.12 அன்று முழுமையாக நிறுத்தப்படும். ஈராண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட இந்தச்செயலியால், எதிர்பார்த்த அளவிற்கு அதிக பயனர்களை பெறமுடியவில்லை என்ற காரணத்தால் இதன் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. இதன் பயனர்கள் இவ்வாண்டு அக்டோபர் 12ஆம் தேதிக்குள் இந்தச்செயலியில் உள்ள அவர்களது சொந்த உள்ளடக்கத்தை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என கூகுள் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7.ஆசிய வளர்ச்சி வங்கியின் அண்மைய அறிக்கையின்படி, நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் வளர்ச்சி விகிதம் என்னவாக இருக்கும்?

அ. 5.0 %

ஆ. 4.5 %

இ. 4.0 % ☑

ஈ. 3.5 %

- மணிலாவைச் சார்ந்த ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) தனது ஆண்டுப் பொருளாதார வெளியீடான, 'ஆசிய வளர்ச்சி கண்ணோட்டம்–2020'ஐ வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையின்படி, நடப்பு நிதியாண்டில் முந்தைய மதிப்பீட்டில் 5 சதவீதமாக இருந்த இந்தியாவின் வளர்ச்சி 4 சதவீதமாக குறையும். COVID–19 நோய்த்தொற்றுக்கு இடையில் பலவீனமான பன்னாட்டுத் தேவை மற்றும் அரசின் கட்டுப்பாட்டு முயற்சிகள் ஆகியவை இந்தச் சதவீதக் குறைப்புக்கான காரணங்களாகக் குறிப்பிடப்படுகின்றன. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2021–22ஆம் நிதியாண்டில் 6.2% ஆக உயரும் என்று இந்த அறிக்கை மதிப்பிட்டுள்ளது.

8. COVID–19 நோய்த்தொற்றுக்கு எதிரான நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்காக, இந்தியாவுக்கு $1 பில்லியன் டாலர் நிதியை வழங்கியுள்ள பன்னாட்டு நிதி நிறுவனம் எது?



அ. பன்னாட்டுச் செலாவணி நிதியம்

ஆ. உலக வங்கி ☑

இ. ஆசிய வளர்ச்சி வங்கி

ஈ. ஆசிய உட்கட்டமைப்பு மற்றும் முதலீட்டு வங்கி

❖ COVID–19 (கொரோனா வைரஸ்) நோய்த்தொற்று பாதிப்பை சமாளிப்பதற்காக இந்தியாவுக்கு அவசர கால நிதியாக $1 பில்லியன் டாலர்கள் ஒதுக்கீடு செய்துள்ளது உலக வங்கி. இதுநாள்வரை, உலக வங்கியிலிருந்து இந்திய நாட்டுக்கு வழங்கப்பட்ட மிகப்பெரிய மானியமாகும் இது.

❖ இந்நிதி அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை உள்ளடக்கும். மேலும், தேசிய சுகாதாரத் திட்டம், தேசிய நோய் கட்டுப்பாட்டு மையம் மற்றும் இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் ஆகியவற்றால் இந்த மானியம் நிர்வகிக்கப்படும். நோய்த்தொற்றால் பாதிக்கப்படவர்களை கண்டறிதல், தனிமைப்படுத்தும் வசதிகளை ஏற்படுத்துதல், புதியதாக தனிமைப்பிரிவு அறைகள், COVID–19 குறித்த ஆய்வு மற்றும் மருத்துவக் கருவிகளை, பாதுகாப்புக் கவசங்களை வாங்குவதற்கு இம்மானியம் உதவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

9. DLS முறையை வகுத்த டோனி லூயிஸ் சமீபத்தில் காலமானார். DLS என்பது எவ்விளையாட்டுடன் தொடர்புடைய கணித சூத்திரமாகும்?

அ. கால்பந்து

ஆ. கிரிக்கெட் ☑

இ. டென்னிஸ்

ஈ. ஸ்குவாஷ்

❖ கிரிக்கெட் போட்டிகளில், "டக்வொர்த்–லூயிஸ் முறை"யை அறிமுகப்படுத்தியவர்களுள் ஒருவரான டோனி லூயிஸ் (79) அண்மையில் காலமானார். கிரிக்கெட் போட்டிகள் இயற்கைப்பேரிடர், மழையால் பாதிக்கப்பட்டால், ஓவர்களை குறித்து ஆட்டத்தை தொடர வகைசெய்வதே, "டக்வொர்த்–லூயிஸ் முறை" ஆகும். கணித நிபுணர்களான டோனி லூயிஸ் மற்றும் பிராங்க் டக்வொர்த் ஆகியோர் கடந்த 1997'இல் இணைந்து கணித சூத்திரத்தின்படி இம்முறையை வகுத்தளித்தர்.

❖ "டக்வொர்த்–லூயிஸ் முறை" என அழைக்கப்படும் இது, கடந்த 1999 முதல் ICCஆல் அதிகாரப்பூர்வமாக கடைபிடிக்கப்படுகிறது 2014ஆம் ஆண்டில், "டக்வொர்த்–லூயிஸ்–ஸ்டெர்ன்" முறை எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டது. கிரிக்கெட் மற்றும் கணிதத்துக்கு அவராற்றிய சேவைக்காக 2010'இல் "இங்கிலாந்து பேரரசின் கௌரவ விருது" அவருக்கு வழங்கப்பட்டது.

10. 2022ஆம் ஆண்டுக்கு மாற்றியமைக்கப்பட்டுள்ள 2021 உலக விளையாட்டுக்கள், தொடக்கத்தில் எந்த நகரத்தில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தன?

அ. பர்மிங்காம் ☑

ஆ. கிளாஸ்கோ

இ. டோக்கியோ

ஈ. ரியோ டி ஜெனிரோ

The World Games
2021 BIRMINGHAM, USA

- தொடக்கத்தில் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அலபாமா மாகாணத்தில் உள்ள பர்மிங்காம் நகரத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த, 2021ஆம் ஆண்டு உலக விளையாட்டுக்கள், தற்போது 2022ஆம் ஆண்டுக்கு மாற்றியமைக்கப்பட்டுள்ளன. COVID–19 நோய்த்தொற்று காரணமாக 2021ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளுடனான இடையூறுகளைத் தவிர்ப்பதற்காக இந்த மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உலக விளையாட்டுக்கள், ஒவ்வொரு நான்காண்டுகளுக்கும் ஒருமுறை நடத்தப்படுகிறது. ஒலிம்பிக் போட்டிகளில் சேர்க்கப்படாத 32 விளையாட்டுகளை இந்த உலக விளையாட்டுப் போட்டிகள் உள்ளடக்கியுள்ளது.

தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- மலைப்பகுதிகளை ஆக்கிரமித்து அமைக்கப்பட்ட மனைகளை வரைமுறைப்படுத்த புதிய விதிகளை தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது. மலைப்பகுதிகளில் வீட்டு மனைகளை வாங்கியவர்கள் பெரும்பாலும் ஏழைகளாகவும் அப்பாவிகளாகவும் இருப்பதால் இந்த வரைமுறை அவசியம் என அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு, கடந்த 2017ஆம் ஆண்டு அங்கீகாரமற்ற வீட்டு மனைகளை வரைமுறைபடுத்துவது தொடர்பான புதிய விதிகளை வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.

நடப்பு நிகழ்வுகள்

1. COVID–19 நோய்த்தொற்றை வெற்றிகொள்வதற்கு செயல்மிகு தீர்வுகளைக் கண்டுபிடிப்பதற்காக, மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தால் தொடங்கப்பட்டுள்ள ஆன்லைன் ஊடுருவல் (Online Hackathon) போட்டியின் பெயரென்ன?

அ. Hack the COVID – India

ஆ. Hack the Crisis – India ☑

இ. Hack Corona – India

ஈ. COVID Hack India

- COVID–19 நோய்த்தொற்றை வெற்றிகொள்வதற்கான செயல்மிகு தீர்வுகளைக்கண்டுபிடிக்க, 'Hack the Crisis–India' என்னும் ஆன்லைன் ஊடுருவல் போட்டியை மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பம், தொலைத்தொடர்பு மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் சஞ்சய் தோத்ரே தொடங்கி வைத்தார். உலகளாவிய இந்த ஹேக்கத்தான், 'Hack a Cause–India' மற்றும் 'FICCI பெண்கள் அமைப்பு, புனே' ஆகியோரால் இந்திய அரசாங்கத்தின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் ஆதரவுடன் நடத்தப்படுகிறது.

- 48 மணிநேரம் நடைபெறும் இந்த ஹேக்கத்தானில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட அணிகளில் உள்ள 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் தங்கள் செயல்மாதிரிகளை மேம்படுத்துவார்கள். இந்தியாவின் சிறந்த அணிகள் வரும்வாரங்களில் நடக்கும், 'Hack the Crisis – World' போட்டியில் பங்கேற்பார்கள் என சஞ்சய் தோத்ரே மேலும் கூறினார்.

2.சமூக தொழில்முனைவுக்கான மதிப்புமிக்க $1.5 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான, 'ஸ்கோல்' விருதை வென்ற இந்திய அரசு சாரா அமைப்பு எது?

அ. CARE India

ஆ. CRY

இ. ARMMAN ☑

ஈ. SMILE

- இந்தியாவைச் சார்ந்த இலாபநோக்கற்ற, 'ARMMAN' அமைப்புக்கு, நடப்பாண்டுக்கான (2020) 'சமூக தொழில்முனைவு'க்கான மதிப்புமிக்க, 'ஸ்கோல்' விருது வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவில் தாய்–சேய் நலத்துறையில் பங்களிப்பு செய்வதற்காக இந்தத்தொண்டுநிறுவனம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. $1.5 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பினைக்கொண்ட இந்த விருதை வென்ற 5 அமைப்புகளுள், ஆசியா மற்றும் ஆபிரிக்காவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே அமைப்பு இதுவாகும். இத்தன்னார்வத் தொண்டு நிறுவனம், இந்திய அரசுடன் இணைந்து நடமாடும் நலத்திட்டங்களை செயல்படுத்திவருகிறது.

3. COVID–19 காரணமாக நாடடங்கு அமலிலுள்ள இந்நிலையில், பிட்ச் மதிப்பீடுகளின் ஓர் அண்மைய அறிக்கையின்படி, நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் மதிப்பிடப்பட்ட வளர்ச்சி விகிதம் என்ன?

அ. 2.0 % ☑

ஆ. 2.4 %

இ. 3.2 %

ஈ. 3.0 %

❖ பிட்ச் மதிப்பீடுகள் நிறுவனம் நடப்பு நிதியாண்டுக்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி பற்றிய கணிப்பை வெளியிட்டுள்ளது. அதில், பொருளாதார வளர்ச்சி குறியீடான மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) நடப்பு நிதியாண்டில் 2 சதவீதமாக இருக்கும் எனத் தெரிவித்துள்ளது. இதற்குமுன்பு இந்தியாவின் GDP குறித்து இந்த நிறுவனம் வெளியிட்டிருந்த கணிப்பில், நடப்பு 2020–21ஆம் நிதி ஆண்டுக்கான GDP வளர்ச்சி 5.1 சதவீதமாக இருக்கும் எனத் தெரிவித்திருந்தது.

❖ COVID–19 நோய்த்தொற்று பாதிப்பால் ஏற்பட்ட தாக்கம்தான் இதற்கு காரணம் என பிட்ச் மதிப்பீடுகள் நிறுவனம் கூறியுள்ளது. தற்போதைய GDP மதிப்பீடுதான், கடந்த 30 ஆண்டுகளில் அந்நிறுவனத்தால் கணிக்கப்பட்ட மிகக்குறைந்த மதிப்பீடாகும். இந்தியா மட்டுமல்லாது உலகளவிலும் பொருளாதார மந்த நிலை வரும் என இந்நிறுவனம் எச்சரித்துள்ளது.

4. "ஆபரேஷன் சஞ்சீவினி"யின்கீழ், எந்த நாட்டிற்குத் தேவையான அத்தியாவசிய மருந்துகள் மற்றும் உணவு தானியங்களை, இந்தியா, வழங்கியுள்ளது?

அ. மியான்மர்

ஆ. மாலத்தீவுகள் ☑

இ. இலங்கை

ஈ. வங்கதேசம்

❖ COVID–19 நோய்த்தொற்று பாதிப்புகளைச் சமாளிப்பதற்கான ஓர் உதவியாக இந்திய வான்படையின் ஹெர்குலஸ் வானூர்தி, சமீபத்தில், மாலத்தீவுக்கு சுமார் 6.2 டன் அத்தியாவசிய மருந்துப்பொருட்களை சுமந்து சென்றது. இதற்காக, பல்வேறு நகரங்களில் இருந்து மருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டன. முன்னதாக, அத்தியாவசிய மருந்துகளுடன் கூடிய ஒரு மருத்துவக் குழுவை, இந்தியா, மாலத்தீவுக்கு அனுப்பிவைத்தது குறிப்பிடத்தக்கது. இத்தீவுநாடு, பெரும்பாலும் இந்தியாவையே சார்ந்து இருப்பதால், அத்தியாவசிய உணவு தானியங்கள் மற்றும் நுகர் பொருட்களும் அதோடு வழங்கப்பட்டுள்ளன.

5. காங்காங், லியான்லியன் மற்றும் செஞ்சென் ஆகியவை, சமீபத்தில் வெளியிடப்பட்ட எந்தச் சர்வதேச விளையாட்டு நிகழ்வுக்கானச் சின்னங்களாகும்?

அ. கோடைக்கால ஒலிம்பிக் ஆ. குளிர்கால ஒலிம்பிக்

இ. ஆசிய விளையாட்டுக்கள் ☑ ஈ. உலக விளையாட்டுக்கள்

❖ 2022 ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் அதிகாரப்பூர்வச் சின்னங்கள், சமீபத்தில் சீனாவில் டிஜிட்டல் முறையில் நடந்த வெளியீட்டு விழாவில் வெளியிடப்பட்டன. Congcong, Lianlian மற்றும் Chenchen ஆகிய மூன்றும் சீனாவின் ஹாங்க்சோவில் நடைபெறவிருக்கும் 19ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் சின்னங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. அந்நகரத்தின் சிறப்பை எடுத்துக்காட்டும் விதமாக இந்த 'Smart Triplets – துடியான முப்பிறவிகள்' தெரிவு செய்யப்பட்டுள்ளன.

6.அறிவிக்கப்பட்ட PLI, EMC 2.0 மற்றும் SPECS உள்ளிட்ட ₹48,000 கோடி மதிப்புள்ள மூன்று ஊக்கத் திட்டங்களும் தொடர்புடைய துறை எது?

அ. மின்னுற்பத்தி

ஆ. மின்னணுப் பொருட்கள் உற்பத்தி ☑

இ. புதுப்பிக்கத்தக்க ஆற்றல்

ஈ. ஜவுளித்துறை

❖ மின்னணுப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக, மின்னணு உற்பத்தித் தொகுப்புகள் (EMC 2.0); உற்பத்தியுடன் இணைக்கப்பட்ட ஊக்கத்திட்டம் (PLI), மின்னணுவியல் கூறுகள் மற்றும் குறைக் கடத்திகள் உற்பத்தியை மேம்படுத்துவதற்கான திட்டம் (SPECS) ஆகிய 3 ஊக்கச்சலுகை திட்டங்களை மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் அறிவித்துள்ளது. கடந்த மாதம் அமைச்சரவையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட இந்தத் திட்டங்களில், ₹48,000 கோடி மதிப்பிலான சலுகைகள் அடங்கும்.

❖ PLI என்பது ₹40,000 கோடி செலவினத்துடன் கூடிய ஒரு மிகப்பெரிய திட்டமாகும். இது, உள்நாட்டில் அலைபேசி தயாரிக்கும் நிறுவனங்களுக்கு, அவற்றின் விற்பனை வளர்ச்சிக்கு ஏற்ப, 5 ஆண்டுகளுக்கு 4–6 சதவீதம் வரை ஊக்கத்தொகையை வழங்கும்.

7. 21 நாள் நாடடங்கிற்கு இடையே அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டுசெல்வதற்காக, இந்திய இரயில்வேயின் எந்தப் பிரிவு, 'தூத் துரந்தோ சிறப்பு' இரயில்களை இயக்கிவருகிறது?

அ. தெற்கு இரயில்வே

ஆ. தெற்கு மத்திய இரயில்வே ☑

இ. மத்திய இரயில்வே

ஈ. வடக்கு இரயில்வே

❖ COVID–19 நோய்த்தொற்று காரணமாக நாடடங்கு உத்தரவு அமலிலுள்ள இந்நிலையிலும் தடையின்றி அத்தியாவசியப் பொருட்களின் கிடைப்பை உறுதிசெய்வதற்காக, தெற்கு–மத்திய இரயில்வே சமீபத்தில் 'தூத் துரந்தோ சிறப்பு' இரயிலை இயக்கத்தொடங்கியது. 2020 ஏப்ரல் 14, வரை பயணிகள் இரயில் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ள நிலையிலும், இந்த இரயில்கள் இயக்கப்படும்.

❖ அண்மையில், ரேணிகுண்டாவிலிருந்து தில்லிக்கு ஆறு சரக்குந்து முழுவதும் பால் மற்றும் இரண்டு சரக்குந்து முழுவதும் மாம்பழம் கஸ்தூரி முலாம்பழம்களுடன் இந்த இரயில் அனுப்பப்பட்டுள்ளது. இந்தச் சிறப்பு இரயில், மணிக்கு சராசரியாக மணிக்கு 110 கி.மீ வேகத்தில் இயக்கப்படுகிறது.

8.கண்ணிவெடி நடவடிக்கைகளில் விழிப்புணர்வு மற்றும் உதவிக்கான சர்வதேச நாள் (International Day for Mine Awareness and Assistance in Mine Action) அனுசரிக்கப்படும் தேதி எது?

அ. ஏப்ரல் 4 ☑

ஆ. ஏப்ரல் 2

இ. ஏப்ரல் 6

ஈ. ஏப்ரல் 8

- 2005ஆம் ஆண்டு ஐ.நா பொது அவை அறிவித்ததைத்தொடர்ந்து, ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 4 அன்று, "கண்ணிவெடி நடவடிக்கைகளில் விழிப்புணர்வு & உதவிக்கான பன்னாட்டு நாள்" அனுசரிக்கப்பட்டு வருகிறது. உயிர்களைக் காத்தல், மனிதாபிமான நோக்கத்துடன் உதவிகளை வழங்குதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை எளிதாக்குதல் போன்றவற்றுக்காக, கண்ணிவெடி நடவடிக்கைகள் குறித்த ஐக்கிய நாடுகளின் சேவையானது 20 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றி வருகிறது.
- 2015ஆம் ஆண்டில், நடிகர் டேனியல் கிரெய்க் அவர்களை கண்ணிவெடிகள் மற்றும் வெடிமருந்துகளை நீக்குவதற்கான ஐக்கிய நாடுகளின் முதல் உலகளாவிய வழக்குரைஞராக ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் நியமித்தார்.

9. COVID–19 நோயாளிகளுக்கான சிகிச்சையில் ஈடுபட்டுள்ள மருத்துவப்பணியாளர்களை ஏற்றிச் செல்வதற்காக, எந்த வாடகையுந்து செயலியுடன் தேசிய சுகாதார ஆணையம் கூட்டிணைந்துள்ளது?

அ. ஊபர் ☑

ஆ. ஓலா

இ. மேரு

ஈ. ரெட் டாக்ஸி

- COVID–19 நோயாளிகளுக்கான சிகிச்சையில் ஈடுபட்டுள்ள மருத்துவப் பணியாளர்களுக்கு போக்குவரத்து சேவைகளை வழங்குவதற்காக, தேசிய சுகாதார ஆணையம் ஊபர் செயலியுடனான ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. ஊபர் நிறுவனம் அதன் 'UberMedic' சேவையின் மூலம் சில நகரங்களில் மட்டும், மருத்துவ வசதிகளுக்கு ஆதரவளிக்கும் விதமாக 150 மகிழுந்துகளை இலவசமாக வழங்குவதாக அறிவித்துள்ளது.
- நாடடங்கு உத்தரவைத் தொடர்ந்து அனைத்து வகையான பொது மற்றும் தனியார் போக்குவரத்து தடைசெய்யப்பட்டுள்ள காரணத்தைத்தொடர்ந்து ஊபர் நிறுவனத்தால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப் –பட்டுள்ளது. ஒவ்வொரு பயணத்தின்போதும், மகிழுந்தின் கூரை முதல் தரைவரை ஒரு நெகிழித்தாள் கொண்டு முழுவதுமாக சுற்றப்படும். மேலும், மகிழுந்தை கிருமிநீக்கஞ்செய்வது போன்ற சுகாதாரம் சார்ந்த நடவடிக்கைகளும் உறுதிசெய்யப்படும்.

10. 'COVID–19 (கொரோனா) நோய்த்தொற்றை எதிர்த்துப்போராடுவதற்கான உலகளாவிய ஒற்றுமை' என்ற தலைப்பில், தீர்மானத்தை ஏற்றுக்கொண்டுள்ள பன்னாட்டு அமைப்பு எது?

அ. ஐக்கிய நாடுகள் அவை ☑

ஆ. ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு அவை

இ. உலக நலவாழ்வு நிறுவனம்

ஈ. ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம்

❖ 'COVID–19 (கொரோனா) நோய்த்தொற்றை எதிர்த்துப் போராடுவதற்கான உலகளாவிய ஒற்றுமை' என்ற தலைப்பிலான தீர்மானத்தை ஐ.நா அவையின் பொது அவை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. இந்தத்தீர்மானத்தை, இந்தியா உட்பட 188 உறுப்பினர்கள் இணைந்து வழங்கின. COVID–19 தொற்று நோயை எதிர்த்துப்போராடுவதற்கு பன்னாட்டளவிலான ஒத்துழைப்பை தீவிரப்படுத்துவதற்காக 193 உறுப்பினர்களைக்கொண்ட ஐ.நா அவை அழைப்புவிடுத்துள்ளது. அமைதியான நடைமுறையின்கீழ் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தீர்மானம், ஐக்கிய நாடுகள் அவையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உலகளாவிய தொற்றுநோய் குறித்த முதல் ஆவணமாகும்.

தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ முப்பது நிமிடங்களில் COVID–19 நோய்த்தொற்றை கண்டறியும், 'Rapid Test' கருவிகள் சீனாவிலிருந்து வாங்கப்படவுள்ளதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.